செ.வெ.எண் : 831 செய்தி வெளியீடு– 3.10.2008

## முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம்
## ஓய்வு பெற்ற நீதியரசர் ஏ.கே. ராஜன் தலைமையிலான நிர்வாக சீர்திருத்தக்குழு அறிக்கை அளிக்கப்பட்டது

அரசின் நடைமுறையை எளிமைப்படுத்தி, வெளிப்படையான மற்றும் ஊழலற்ற நிர்வாகத்தினை தலைமைச் செயலகம் முதல் கிராமம் வரை அளிப்பதற்காக சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசர் டாக்டர் ஏ.கே. ராஜன் தலைமையில் 9.3.2007 அன்று இந்த அரசு அமைத்தது.

நிர்வாகத்தில் வெளிப்படையான தன்மையை ஊக்குவிப்பதற்காகவும், ஊழல் மற்றும் சிவப்பு நாடா முறை ஆகியவற்றை நீக்குவதற்காகவும், நிர்வாகச் சீர்திருத்தக்குழு தனது குறிப்பாய்வுக்கான தலைப்புகள் குறித்து பல அம்சங்களை விவாதித்து, தமிழக அரசின் கீழ் செயல்படும் அனைத்துத் துறைத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியரின் கருத்துகளைக் கோரிப் பெற்றது. இவை தொடர்பாக, முன்னணி மற்றும் ஆங்கில நாளிதழ்களில் அறிவிப்புகள் வெளியிடப்பட்டு பொதுமக்களின் கருத்துகளும் பெறப்பட்டன. அதனைத் தொடர்ந்து, வேலூர், கோவை, சேலம், மதுரை, திருச்சி, நெல்லை, திருவள்ளூர், சென்னை உட்பட பல்வேறு மாவட்டங்களில் அலுவல்சாராதோர் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் உட்பட பல்வேறு அலுவலர்களுடன் கலந்தாய்வுக் கூட்டங்களை நடத்தி, எளிய ,வெளிப்படையான, ஊழலற்ற நிர்வாக நடைமுறைகளை உருவாக்குவதற்கான வழிமுறைகள் பரிசீலிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், இக்குழு உருவாக்கிய முதல் அறிக்கையினை 25.4.2008 அன்று ஏற்கனவே வழங்கியுள்ளதைத் தொடர்ந்து, இன்று (3.10.2008) முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற நீதியரசர் டாக்டர் ஏ.கே.ராஜன் அவர்கள் தமது குழுவின் சார்பில் இறுதி அறிக்கையினை வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, குழு உறுப்பினர்களான திரு.வி.விஸ்வநாதன், திரு.எஸ்.குமாரசாமி, திரு.எஸ்.சண்முகசுந்தரம், திரு.ஆர்.எஸ்.பாரதி, டாக்டர் என். கல்யாணசுந்தரம், டாக்டர் கே.பி. சுப்பிரமணியன், திரு. ஏ. முத்துகிருஷ்ணன், திரு.ஆர்.பன்னீர் செல்வம், திருமதி அம்புஜம் துரை ஆகியோரும், இக்குழுவின் உறுப்பினர் செயலர் டாக்டர் டி.எஸ்.ஸ்ரீதர் அவர்களும் உடனிருந்தனர்.

* * *

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை-9